DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/24 |
| Deposition of Witness for | : | P.W.8 |
| Name | : | **மல்லிகா** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 09.09.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது செல்லப்பனேந்தலில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 கடம்பவள்ளி எனது மூத்த மகள். அ.சா.2 அழகுநித்யா எனது 2 வது மகள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் எனது மூத்த மருமகன். சாட்சிகள் சூரவள்ளி, பிரபாகரன் ஆகியோர்களை எனக்கு தெரியும் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். அ.சா.4 இந்திராணி எனது மச்சான் மகள். எனது மூத்த மகள் கடம்பவள்ளியை ஆஜர் எதிரிக்கு சுமார் 19 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொடுத்தேன்.

2. எதிரி லாரி டிரைவராக வேலை பார்த்து வருகிறார். திருமணமாகி கொஞ்ச நாட்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள் அதன்பிறகு அவர்களுக்கிடையே பிரச்சினை ஏற்பட்டது. அதனால் எனது மகள் கடம்பவள்ளி

ஆஜர் எதிரியை பிரிந்து செல்லப்பனேந்தலில் உள்ள எனது வீட்டில் மேல் மாடியில் இரண்டு குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறார். வீட்டின் கீழ் பகுதியில் நானும் எனது கணவரும் குடியிருந்து வருகிறோம். எனது மகள் 2 வது மகள் அ.சா.2 அழகு நித்யா எனது வீட்டின் அருகே தனியாகவீடு எடுத்து வசித்து வருகிறார்.

3. எனது மகள் கடம்பவள்ளிக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. கடந்த 23.06.2024 ல் மதியம் 3.00 மணியளவில் நான் எனது வீட்டில் குளித்துவிட்டு தலையை துவட்டிக்கொண்டிருந்தேன். அப்போது எனது மூத்த மருமகனான ஆஜர் எதிரி கண்ணன் என்பவர் எனது வீட்டின் வாசலில் வந்து என்னடி தேவடியா ஆத்தாளும் மகளும் வேசம் போடுகிறீர்களா என்று சொல்லி கையில் வைத்திருந்த அருவாளால் உ ன்னை போட்டால் தான் சரியாகும் என்று எனது தலை முடியை பிடித்து அருவாளால் எனது தலையின் பின்பகுதியில் வெட்டினார்.

4. அதன்பிறகு அருவாளால் எனது முதுகிலும் வெட்டினார். நான் சத்தம் போட்டவுடன் எனது வீட்டின் மாடியில் குடியிருக்கும் எனது மூத்த மகள் கடம்பவள்ளி மற்றும் இளைய மகள் அழகுநித்யா ஓடி வந்து எதிரியை தடுத்தார்கள். என்னை விலக்கும் போது எதிரி அருவாளால் அழகுநித்யாவை வெட்டியதில் அவருக்கு வலது கை கட்டைவிரல் அருகே வெட்டுப்பட்டு காயம் ஏற்பட்டது. மேலும் விலக்கும்போது எதிரி அருவாளால் கடம்பவள்ளியை வெட்டியதில் அவருக்கு வலது முன் கையில் முட்டிக்கு அருகே பட்டு காயம் ஏற்பட்டது.

5. பின்பு சத்தம் கேட்டு அருகில் இருக்கும் பிராபாகர், சூரவள்ளி ஆகியோர் வந்து எதிரியை விலக்கிவிட்டார்கள். எதிரி விலக்கிவிட்ட பிறகு அருவாளை காட்டி தேவிடியா செத்து தொலைங்கடி என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன்பிறகு காயம்பட்ட எங்களை வண்டியில் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தார்கள். திருப்புவனம் அரசு மருத்துவமனையில் எங்களுக்கு முதலுதவி செய்து கட்டு மட்டும் போட்டார்கள்.

6. பின்பு மருத்துவமனைக்கு செல்கிறீர்களா அல்லது தனியார் மருத்துவமனைக்கு செல்கிறீர்களா என்று கேட்டார்கள் நாங்கள் தனியார் மருத்துவமனைக்கு செல்வதற்கு விருப்பம் தெரிவித்ததால் நானும் காயம்பட்ட எனது இரண்டு மகள்களும் மேல் சிகிச்சைக்காக மதுரை வேலம்மாள் தனியார் மருத்துவமனைக்கு சென்றோம். நான் வேலம்மாள் மருத்துமனையில் 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். இவ்வழக்கு சம்மந்தமாக திருப்புவனம் போலிசார் நான் வேலம்மாள் மருத்துவமனையில் வைத்த விசாரணை செய்தார்கள். வழக்கு சம்மந்தமாக எனது மூத்த மகள் அ.சா.1 கடம்பவள்ளி புகார் கொடுத்தார். வழக்கு சம்பவத்தில் எதிரி என்னை வெட்ட பயன்படுத்தி அருவாளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.பொ.சா1 தான் எதிரி என்னை சம்பவத்தில் தாக்க பயன்படுத்திய அருவாளாகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.சா.1 கடம்பவள்ளி திருப்புவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. எனது மகள் புகார் கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது மறுநாள் தான் தெரியும். நான் வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தவுடன் தான் திருப்புவனம் போலிசார் அங்கு வந்து என் மகள் அ.சா.1 கடம்பவள்ளியிடம் புகார் எழுதி வாங்கிசென்றார்கள் என்றால் சரிதான். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. அவ்வாறு புகார் கொடுக்கும்போது 23.06.2024 மாலை 6.00 அல்லது 7.00 மணிக்குள் இருக்கும் என்றால் சரிதான்.

2. எனது மகள் அ.சா.2 அழகுநித்யா புகார் கொடுத்தாரா என்றால் என் இரண்டு மகள்களும் திருப்புவனம் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாக திருப்புவனம் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றார்கள் அங்கிருந்த போலிசார் எங்களை மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டு வந்து பிறகு காவல்நிலையம் வந்து புகார் கொடுக்க சொல்லிவிட்டதால் அவர்கள் இருவரும்

அப்போது போலிசில் புகார் கொடுக்காமல் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். சம்பவத்தின் போது எனது கணவர் இருந்தாரா என்றால் இல்லை அப்போது அவர் வேறு ஊருக்கு சென்றுவிட்டார். அ.சா.1 கடம்பவள்ளியும் நானும் ஆஜர் எதிரியுடன் பேசிக்கொள்வீர்களா என்றால் சம்பவத்திற்கு ஆறு வருடத்திற்கு முன்பாக இருந்து பேசிக்கொள்வதில்லை.

3. எதிரி என் வீட்டிற்கு வந்து குழந்தைகளுடன் பேசிக்கொள்வாரா என்றால் இல்லை, ஆனால் என் பேரப்பிள்ளைகள் குளிக்கச் செல்லும்போதும் விளையாட செல்லும்போதும் வெளியே வைத்து எதிரி அவருடைய பிள்ளைகளுடன் பேசிக்கொள்வார். எதிரி பிள்ளைகளுடன் அவ்வாறு பேசிக்கொள்வதை நானும் எனது மகள் கடம்பவள்ளியும் தடுத்தததில்லை என்றால் சரிதான். எதிரி தன் பிள்ளைகளுடன் பேசிக்கொள்ளலாம் என்று நீதிமன்றத்திலிருந்து உத்தரவும் அனுமதியும் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு முன்பாக கடைசியாக எப்போது எதிரி தன் பிள்ளைகளுடன் பேசினார் என்றால் தெரியாது. எந்த நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நடைபெற்றது என்றால் சிவகங்கை நீதிமனறத்தில் நடந்தது. என்னை போலிசார் விசாரிக்கும் போது திருப்புவனம் நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததாக நான் கூறியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை.

4. சம்பவத்திற்கு முன்பாக விவாகரத்து வழக்கு எப்போது முடிவடைந்தது என்றால் சம்பவத்திற்கு பிறகு தற்போது 4 மாதத்திற்கு முன்பாக தான் அந்த விவகாரத்து வழக்கு சிவகங்கை நீதிமன்றத்தில் ஆஜர் எதிரிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த வழக்கிற்கு நானும் என் மகளும் வாய்தாவிற்கு அந்த நீதிமன்றத்திற்கு சென்று வந்தோம் என்றால் சரிதான். அ.சா.2 அழகுநித்யா அதே ஊரில் நான் இருக்கும் தெருவிற்கு ஒரு வீடு தள்ளி தனது சொந்த வீட்டில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரிக்கும்போது அ.சா.2 அழகுநித்யாவும், அ.சா.1 கடம்பவள்ளியும் எனது வீட்டின் மாடியில் வாடகைக்கு குடியிருக்கிறார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை.

5. சம்பவ காலத்தில் அ.சா.1 கடம்பவள்ளிக்கு 18 வயதில் பார்த்தசாரதி மற்றும் 13 வயதில் ரிஷிநந்தன் என்ற இரண்டு ஆண்குழந்தைகள் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று இரண்டு பிள்ளைகளும் என் வீட்டில் இருந்தார்களா என்றால் வீட்டு மாடியில் டிவி பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் இந்த சம்பவம் தெரியுமா என்றால் தெரியும். அவர்களுக்கு இந்த சம்பவத்தில் காயங்கள் இருந்ததா என்றால் இல்லை. அவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்களா என்றால் சண்டை நடைபெறுகிற பொழுது அவர்களும் வந்து தான் விலக்கிவிட்டார்கள். எதிரி வைத்திருந்த அருவாளை பறித்தார்களா என்றால் பறித்து வாசல் முன்னால் எரிந்துவிட்டார்கள். எனது பேரப்பிள்ளைகள் எதிரியை அடித்தார்களா என்றால் இல்லை ஒருவருக்கொருவர் மல்லுக்கட்டி உருண்டதில் அதாவது எதிரியும் அவரின் இரண்டு மகன்களும் பக்கத்தில் இருந்த கல்லில் பட்டு எதிரிக்கு தலையில் காயம் ஏற்பட்டது.

6. என்னை போலிசார் விசாரித்தபோது எதிரி நிலைதடுமாறி படியில் விழுந்ததில் அவருக்கு தலையின் பின்பக்கம் மற்றும் தலையின் முன்பக்கம் ரத்தக்காயம் ஏற்பட்டது என்று கூறியுள்ளேனா என்றால் அவ்வாறு தான் சொன்னார்கள் நானும் சொன்னேன். எதிரி சம்பவ நேரத்தில் என் வீட்டிற்கு வரும்போது நான் என் வீட்டு வாசலில் குளித்துவிட்டு தலையை துவட்டிக்கொண்டிருந்தேன் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அப்போது எதிரி என்னை பார்த்து ஆத்தாளும் மகளும் வேசமா போடுகிறீர்கள் என்று சொல்லி என் தலை முடியை பிடித்து இழுத்து என்னை வெட்டினார் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னை எதிரி வெட்டும் போது எனது இரண்டாவது மகள் அழகுநித்யா எனது வீட்டின் கீழ்தளத்தில் டிவி பார்த்துகொண்டிருந்தார் எனது மூத்த மகள் மாடியில் டிவி பார்த்து கொண்டிருந்தார்.

7. என்னை வெட்டிவிட்டானே என்று நான் அலறிய சத்தத்தை கேட்டுதான் அ.சா.1 மற்றும் அ.சா.2 சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் வருவதற்கு முன்பாகவே சூரவள்ளியும், பிரபாகரனும் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். அவர்களும் நான் அலறிய சத்தத்தை கேட்டு தான் சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். அ்வர்கள் நால்வரும் சம்பவயிடத்திற்கு வரும்போது நான் வெட்டுப்பட்டு மயக்கநிலையில் கீழே கிடந்தேன் என்றால் சரிதான். என்னை எதிரி அருவாளால் வெட்டினாரா என்றால் முதுகில் வெட்டினார். போலிசார் விசாரணையில் எதிரி என்னை முதுகில் குத்தினார் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம்.

8. எதிரி நான் மயங்கிகிடந்தபோது சுமார் 10 நிமிடம் சம்பவயிடத்தில் நின்றிருந்தார் என்றால் சரிதான். எனக்கு பிறகு அ.சா.2 அழகுநித்யாவிற்கு வெட்டு விழுந்தது என்றால் சரிதான். அ.சா.2 அழகுநித்யாவிற்கு வெட்டு விழுந்தபிறகு தான் அ.சா.1 கடம்பவள்ளி மாடியிலிருந்து ஓடி வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு அ.சா.1 கடம்பவள்ளி மாடியிலிருந்து கீழே ஓடிவருவதற்குள் சம்பவயிடத்தில் சுமார் 40, 50 பேர்கள் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். அ.சா.1 கடம்பவள்ளியை வெட்டுவதற்கு முன்பு அங்கு கூடியிருந்த யாரும் எதிரியை பிடிக்கவுமில்லை, தடுக்கவுமில்லை என்றால் அது எப்படி முடியும் என்று சாட்சி கூறுகிறார்.

9. நான் சொல்வது போல் எனது மகள் அ.சா.1 கடம்பவள்ளியை எதிரி அருவாளால் வெட்டவில்லை என்றும் அவருக்கு சம்பவத்தில் எந்த காயமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதே போல் எனக்கும் எனது இரண்டாவது மகள் அ.சா.2 அழகுநித்யாவிற்கும் சம்பவத்தில் எந்த காயமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி சம்பவத்தன்று என் வீட்டிற்கு வரவில்லை என்றும் நான் கூறியது போல என்னிடம் காட்டப்படும் அ.த.பொ.சா.1 அருவாளை வைத்து எதிரி எந்த காயமும் ஏற்படுத்தவில்லை என்றும் என் வீட்டு முன்னால் எதிரி கல்லில் விழுந்து

அவருக்கு அந்த இடத்தில் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

10. நாங்கள் திருப்புவனம் காவல்நிலையத்திற்கும், திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கும் செல்வதற்கு முன்பாகவே எதிரி திருப்புவனம் காவல்நிலையத்திற்கு சென்று எங்கள் மீது புகார் கொடுத்து விட்டு , திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் அவ்வாறு தான் சொன்னார்கள். எதிரி மதுரையில் உள்ள All India Permit உள்ள லாரி உரிமையாளரிடம் டிரைவராக வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். எதிரி வெளி மாநிலங்களுக்கு வேலைக்கு சென்றுவிட்டு மாதத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் மட்டும் செல்லப்பனேந்தலில் உள்ள அவரது பெற்றோர் வீட்டில் வந்து தங்கிவிட்டு செல்வார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. செல்லப்பனேந்தலில் உள்ள அவரது பெற்றோர் வீட்டிற்கு வந்து எதிரி தங்கி செல்வார் என்றும் அவ்வாறு சம்பவத்தன்று எதிரி தன் பெற்றோர் வீட்டிற்கு வந்து துாங்கிக்கொண்டிருந்தபோது நானும் அ.சா.1, அ.சா.2 மற்றும் அவரது பிள்ளைகளும் அந்த வீட்டிற்குள் ஆயுதங்களுடன் நுழைந்து எதிரியை வெட்டி காயப்படுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு அவ்வாறு ஏற்பட்ட காயம் சம்மந்தமாக அவர் எங்கள் மீது திருப்புவனம் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றதை அறிந்து போலிஸ்காரர் ஆண்டியப்பன் மூலம் நாங்கள் எங்களை காப்பாற்றி கொள்ள எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.09 15:22:10 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை.**